உண்மை நகல்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

பணிகள் – நகராட்சித் தலைவர்கள் – நகராட்சி எல்லைக்குள் மிக அத்தியாவசிய அவசர பணிகள் செய்து முடிக்க நிர்வாக ஒப்புதல் அளிக்க அதிகாரம் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நபி 5) துறை
(நிலை) எண். 98 நாள்: 16/4/99

படிக்கப்பட்டது:-

1) திரு. எஸ். பாரதி, தலைவர், தமிழ்நாடு நகர்மன்ற பேரவை, ஆலந்தூர் கடித நாள்: 22/4/98

2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். 35127/98/எல்3 நாள்: 12.11.98.

ஃxx

ஆணை:-

22.4.98 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற நகர்மன்றத் தலைவர்கள் பேரவைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் கீழ்கண்டதும் ஒன்றாகும்:-

பொருள் எண்: 21

---

நகராட்சி எல்லைக்குள் மிக அத்தியாவசிய அவசர பணிகள் செய்துமுடிக்க கால தாமதத்தைத் தவிர்க்க மாநகராட்சி சட்டத்தில் மேயருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது போல் நகராட்சித் தலைவருக்கு கிரேடு வாரியாக உயர்ந்தபட்ச தொகை நிர்ணயிக்க தீர்மானிக்க கோரலாம்.

இத்தீர்மானம் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது தற்போது நகர்மன்றத் தலைவர்களுக்கு மாநகராட்சி மேயர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை போன்று அதிகாரம் ஏதும் வழங்கப்படவில்லையாதலால், மேற்படி தீர்மானத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி சிறப்புநிலை மற்றும் தேர்வுநிலை நகராட்சிகளுக்கு ரூ.50,000/– முதல்நிலை நகராட்சிகளுக்கு ரூ.30000/– மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகளுக்கு ரூ.20000/–க்கு அதிகமாகாமல் அத்தியாவசிய அவசரபணிகள் செய்ய நிர்வாக ஒப்புதலளிக்க நகர்மன்றத் தலைவர்களுக்கு சில நிபந்தனையுடன் அதிகாரம் அளிக்கலாமென நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்தபின் ஏற்க முடிவெடுத்துள்ளது. அவ்வண்ணமே, சிறப்புநிலை மற்றும் தேர்வுநிலை நகராட்சிகளுக்கு ரூ.50000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) முதல்நிலை நகராட்சிகளுக்கு ரூ.30000/–(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மற்றும் இரண்டாம்நிலை நகராட்சிகளுக்கு ரூ.20000/–(ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆகிய மதிப்பீட்டிற்கு அதிகமாகாமல், அத்தியாவசிய அவசர பணிகள் செய்ய நிர்வாக ஒப்புதலளிக்க நகர்மன்றத் தலைவர்களுக்கு, கீழ்கண்ட நிபந்தனைகளுடன், அதிகாரம் அளித்து அரசு இவண் ஆணையிடுகிறது:

அ) பணிகளுக்கான மதிப்பீடு ஒப்புதல் அளித்தது அடுத்த நகர்மன்ற கூட்டத்தில் தகவலுக்காக வைக்கப்பட வேண்டும்; மற்றும்

ஆ) பணிகளுக்காக செலவிடப்படும் தொகை வரவு செலவு திட்டத் தொகைக்குள் அடங்க வேண்டும்.

மேற்படி ஆணையினை முறைப்படுத்துவதற்கான தக்க விதிகள் செய்வது குறித்த ஆய்வு செய்த பரிந்துரையை அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/– x x x x x x
அரசு செயலர்

//உண்மை நகல்//

கண்காணிப்பாளர்

14/6/99

அனுப்புநர் | பெறுநர்
---|---
திரு. க. கணேசன், இ.ஆ.ப.,<br>நகராட்சி நிர்வாக ஆணையர்,<br>சேப்பாக்கம், சென்னை-5 | அனைத்து நகராட்சி ஆணையர்<br>(நகர் மன்றத்தலைவர் மூலமாக)

ந.மு.எண். 31803/99/எல்3 நாள்: 14/6/99

ஐயா/ அம்மையீர்,

பொருள்: பணிகள் - நகராட்சித் தலைவர்கள் - நகராட்சி எல்லைக்குள் மிக அத்தியாவசிய அவசர பணிகள் செய்து முடிக்க நிர்வாக ஒப்புதல் அளிக்க அதிகாரம் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை: அரசாணை (நிலை) எண். 98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (நநி5) நாள்: 16/4/99.

---

பார்வையில் காணும் அரசாணை நகல் ஒன்றினை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஒம்/- எஸ். ஜெயராமன்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

இணைப்பு: மேற்படி

நகல்:-
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்.

14/6/99